**உதவி அமர்வு நீதிமன்றம், போளூர்**

**அமர்வு வழக்கு எண். 175/2013**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 18th day of February 2026

| | |
|---|---|
| பெயர் | ராஜசேகர் |
| தந்தை பெயர் | ராஜகோபால் |
| வயது | 52 |
| கிராமம் | ஓதலவாடி காலணி |
| வட்டம் | போளூர் |
| தொழில் | நெடுஞ்சாலை ஒப்பந்த தொழிலாளர் |

1, 2, 4 முதல் 8 எதிரிகள் மற்றும் அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.
( 3ம் எதிரி இறந்துவிட்டதால் அவரை பொருத்து குற்றச்சாட்டு முடிவுறப்பட்டது)

**அரசு தரப்பு முதல் விசாரணை: அ.சா.1**

நான் ஓதலவாடி காலணியில் அம்மாவுடன் குடியிருந்து வருகிறேன். எனது மனைவி மற்றும் குழந்தைகள் சென்னையில் குடியிருக்கிறார்கள். சம்பவத்தன்று திருவிழா என்பதால் ஊருக்கு வந்திருந்தார்கள். ஆஜர் எதிரிகளில் 2ம் எதிரி இளங்கோ, 4ம் எதிரி அஞ்சலி மற்றும் 8ம் எதிரி இளையராஜா ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் ஊர்காரர்கள். மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவ தேதி , மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 2010ம் வருடம் ஒரு நாள் மதியம் சுமார் 12 மணியளவில் ஓதலவாடி கிராம காலணியில் கெங்கையம்மனுக்கு கூழ்வார்க்கும் திருவிழா நடைபெற்றது. அப்போது திருவிழாவில் சண்டை நடந்தது. சண்டை யார் யாருக்கு இடையே நடந்தது என எனக்கு தெரியாது. நானும் நான்கு பேர்களும் சேர்ந்து இந்த திருவிழாவை நடத்தினோம். அப்போது சண்டை நடப்பதை பார்த்து அதை மத்தியஸ்தம் செய்ய நான் சென்றேன். அங்கு தகறாறு அதிகமாக ஆஜர் எதிரிகளான 2ம் எதிரி இளங்கோ, 4ம் எதிரி அஞ்சலி மற்றும் 8ம் எதிரி இளையராஜா ஆகியோர்களில் யாரோ ஒருவர் போன் செய்து அடையாளம் தெரியாத ஆட்கள் கத்தி மற்றும் கட்டைகளுடன் வந்தார்கள். நாங்கள் பிடிக்க போகும் போது அவற்றால் தாக்கிவிட்டு ஆற்றில் இறங்கி ஓடிவிட்டார்கள்.

தற்போது என்னிடம் காட்டப்படும் ஆயுதங்கள் தான் அவர்கள் வைத்திருந்ததா என்று என்னால் சரியாக சொல்ல இயலாது. வந்த ஆட்களில் யாரோ ஒருவர் தாக்கி எனது வலது கையில் சின்ன வெட்டு காயம் ஏற்பட்டது. அதன் பின் நான் ஆரணி கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். காவல் துறையில் இது சம்மந்தமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆனால் அதை நான் எழுதவில்லை. எனக்கு தமிழ் எழுத தெரியாது. அதனால் எழுதி கொடுத்ததில் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எதற்காக காவல் துறையினர் கையெழுத்து வாங்கினார்கள் என எனக்கு தெரியாது. மேற்கண்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகவும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சியின் கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் குறித்து காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**2, 4, 7 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் 2ம் எதிரி இளங்கோ, 4ம் எதிரி அஞ்சலி மற்றும் 8ம் எதிரி இளையராஜா ஆகியோர்களில் யார் ஆட்களுக்கு தகவல் கொடுத்தார்கள் என நான் அனுமானத்தின் பேரில் தான் சொல்கிறேன் என்றும் அவர்கள் தான் தகவல் கொடுத்தார்கள் என எனக்கு உறுதியாக தெரியாது என்றால் சரிதான். மேற்கண்ட ஆஜர் 2ம் எதிரி இளங்கோ, 4ம் எதிரி அஞ்சலி மற்றும் 8ம் எதிரி இளையராஜா ஆகியோர் எங்கள் உர்காரர்கள் என்பதால் தான் எனக்கு தெரியும் என்றும் சம்பவத்திற்கு காரணம் அவர்கள் தான் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவில் என்ன எழுதி இருந்தது என எனக்கு தெரியாது என்றும் என்னை கையெழுத்து போட சொன்னதால் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். திருவிழா என்பதால் எங்கள் ஊரை சேர்ந்த நிறைய நபர்கள் சம்பவ இடத்தில் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான்.

நான் ஆஜர் 2ம் எதிரி இளங்கோ, 4ம் எதிரி அஞ்சலி மற்றும் 8ம் எதிரி இளையராஜா, 7ம் எதிரி சசிகுமார் ஆகியோர் மீது குறிப்பிட்டு சம்பவத்திற்கு அவர்கள் தான் காரணம் என புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் 2ம் எதிரி இளங்கோ, 4ம் எதிரி அஞ்சலி மற்றும் 8ம் எதிரி இளையராஜா, 7ம் எதிரி சசிகுமார் எந்த முன்விரோதமும் கிடையாது என்றால் சரிதான். சம்பவத்தன்று ஆஜர் எதிரிகளால் எனக்கு எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றும் அவர்களால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் 2வதாக யார் கையெழுத்து செய்தார்கள் என எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் துறையினர் பூர்த்தி செய்யாத வெள்ளை தாள்களில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.

**மேற்கண்ட குறுக்கு விசாரணையை 1ம் எதிரி, 5 மற்றும் 6 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்

Sd/- S. Senthilbabu,
சாட்சியின் கையொப்பம் — உதவி அமர்வு நீதிபதி,
போளூர்

**<u>உதவி அமர்வு நீதிமன்றம், போளூர்</u>**

**அமர்வு வழக்கு எண். 175/2013**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 18th day of February 2026

| | |
|---|---|
| பெயர் | ஆறுமுகம் |
| தந்தை பெயர் | படவேட்டான் |
| வயது | 65 |
| கிராமம் | ஓதலவாடி காலனி |
| வட்டம் | போளூர் |
| தொழில் | விவசாயம் |

1, 2, 4 முதல் 8 எதிரிகள் மற்றும் அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.
( 3ம் எதிரி இறந்துவிட்டதால் அவரை பொருத்து குற்றச்சாட்டு முடிவுறப்பட்டது)

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை: அ.சா.2</u>**

நான் எனது குடும்பத்தாருடன் ஓதலவாடி கிராமத்தில் விவசாயம் செய்து குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. காவல் துறையினர் சம்பவம் குறித்து என்னிடம் விசாரிக்கவில்லை.

**சாட்சியை அரசு தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் பிறழ் சாட்சியாக கருதி அனுமதிக்கப்பட்டதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

எங்கள் காலனியில் வசிக்கும் சம்மந்தி செல்வராஜ் குடும்பத்தினருக்கும் கவிதா, முனியம்மாள் குடும்பத்தினருக்கும் வீட்டு மனை மற்றும் முனியம்மாளின் மகன் திருமணத்தை ஒட்டியும் தகறாறு ஏற்பட்டு முனியம்மாள் கொடுத்த புகாரின் பேரில் செல்வராஜ் குடும்பத்தினர் மீது சேத்துப்பட்டு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் செல்வராஜ் குடும்பத்தினர் இதை மனதில் வைத்து கொண்டு கடந்த 26.05.2010ம் தேதி காலை 11.30 மணிக்கு எங்கள் காலனியில் கூழ்வார்க்கும் திருவிழா நடந்து கொண்டிருந்த போது செல்வராஜ் வீட்டிற்கு வடக்கே தார் ரோட்டின் பின்னால் விசாரித்து கேட்டு தெரிந்த செல்வராஜின் உறவினரான போளூர் செல்வம் பேட்டையை சேர்ந்த பாக்கியராஜ் என்பவன் தன் நண்பர்களாகிய ஆண்டோ, அகா, சசி ஆகியோர்கள்

டாடா வண்டியிலும் டாடா இண்டிகா வண்டியிலும் வந்தார்கள் என்றும் அங்கிருந்த இளங்கோ, செல்வராஜ், இளையராஜா, அஞ்சலி இவர்களுடன் சேர்ந்து இளங்கோ தலைமையில் ஒன்று கூடி கத்தி, தடி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் தகாத வார்த்தையால் திட்டிக் கொண்டு எவண்டா எவன் மேல் கேஸ் கொடுத்தது, யாரா இருந்தாலும் வெட்டுங்கடா என சத்தம் போட்டு கொண்டு வந்தார்கள் என்றும் நானும் ராஜசேகர், நாகராஜ் மற்றும் மணி இவர்களும் கெங்கையம்மன் கூழ்வார்க்கும் திருவிழா நேரத்தில் இப்படி தகறாறு பண்றீங்கனு கேட்டதாலும் அதற்கு பாக்கியராஜ் தகாத வார்த்தையால் என்னை அசிங்கமாக திட்டி தன் கையில் வைத்திருந்த கொடுவா கத்தியால் இதோடு ஒழிந்து போ என என் தலைமீது வெட்டினான் என்றும் அதை தடுத்த நாகராஜை அதே கத்தியால் முதுகு மீது வெட்டினான் என்றும் தடுக்க வந்த ராஜசேகரை இளங்கோ தன் கையில் வைத்திருந்த கத்தியால் இடது புறங்கையின் மீது வெட்டினான் என்றும் வலது கையின் மீதும் கிழித்தான் என்றும் செல்வராஜீ அவரது மனைவி அஞ்சலியும் என்னை கையாலும் தடியாலும் மாறி மாறி என் இடுப்பின் மீதும் கைகள் மீதும் அடித்தார்கள் என்றும் நாகராஜீயையும் அடித்தார்கள் என்றும் அகா தடியால் மணியை இடது கை புஜத்தின் மீது அடித்தார் என்றும் எனக்கும் நாகராஜீக்கும் ராஜசேகருக்கும் ரத்த காயம் ஏற்பட்டது என்றும் நாங்கள் அலறும் சத்தம் கேட்டு ஊர் மக்கள் ஓடி வந்தார்கள் என்றும் அதை கண்டு மேற்படி எதிரிகள் 2 வாகனத்திலும் தப்பி ஓடிவிட்டார்கள் என்றும் நானும் நாகராஜீம் ஆரணி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு போனோம் என்றும் மணிக்கு ரத்த காயம் இல்லாததால் அவர் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும் இது சம்மந்தமாக ராஜசேகர் சேத்துப்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார் என்றும் அதன் பின் ஆரணி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார் என்றும் சேத்துப்பட்டு போலீசார் சம்பவம் குறித்து என்னிடம் விசாரித்தார்கள் என காவல் நிலைய விசாரணையில் நான் தெரிவித்து விட்டு தற்போது எதிரிகள் இளங்கோ, இளையராஜா மற்றும் அஞ்சலி ஆகியோர் எங்கள் ஊர்காரர்கள் என்பதாலும் அவர்கள்

கேட்டுக்கொண்டதால் நான் இந்த வழக்கில் உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்

Sd/- S. Senthilbabu,
சாட்சியின் கையொப்பம் உதவி அமர்வு நீதிபதி,
போளூர்